பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

18 01 2025 **SATURDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ஊரகப்பகுதிகளின் மேம்பாட்டில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- நம் நாட்டின் ஆன்மிக மற்றும் கலாச்சார பராம்பரியத்தின் கொண்டாட்டமாக மகா கும்பமேளா திகழ்கிறது என்று மத்திய அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.
- தில்லி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் பரிசீலனை தற்போது நடைபெற்று வருகிறது.
- கர்நாடக இசை மும்மூர்த்திகளில் ஒருவரான சத்குரு ஸ்ரீ தியாகராஜர் ஆராதனை விழாவின் முக்கிய நிகழ்ச்சியான பஞ்சரத்ன கீர்த்தனைகள் இசைக்கும் நிகழ்ச்சி திருவையாறில் இன்று நடைபெற்றது.
- 19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக்கோப்பை மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டி மலேசியாவில் இன்று தொடங்கியது.

*--- இனி விரிவான செய்திகள்---*

<<<<<>>>>>

ஊரகப்பகுதிகளின் மேம்பாட்டில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், சிறந்த நிர்வாகம் மற்றும் தகவல் தொழில்நுட்பவசதி ஊரகப்பகுதி மேம்பாட்டிற்கு உத்வேகம் அளித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

கிராமப்புறங்களில் உள்ள நிலங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி, அவர் இக்கருத்தை பதிவு செய்துள்ளார்.

இந்த பணிகள் காரணமாக, 65 லட்சம் நில உரிமையாளர்களுக்கான சொத்துரிமை அட்டைகளை காணொலி வாயிலாக இன்னும் சற்றுநேரத்தில் பிரதமர் வழங்க உள்ளார்.

நாடு முழுவதும் பத்து மாநிலங்கள் மற்றும் இரண்டு யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட 50 ஆயிரம் கிராமங்களை சேர்ந்தவர்களுக்கு இந்த அட்டைகள் வழங்கப்பட உள்ளன.

<<<<<>>>>>

மத்திய அரசு விடுவித்த நிதியை கர்நாடக அரசு முழுமையாக பயன்படுத்த வேண்டும் என்று வேளாண் துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று பெங்களூருவில் அம்மாநில வேளாண்துறை அமைச்சர் திரு **Chaluvaryaswamy** மற்றும் அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

வேளாண்துறையின் வளர்ச்சிக்காக விடுவிக்கப்பட்ட நிதி முழுமையாக பயன்படுத்தப்படவில்லை என்று அவர் கூறினார்.

பிரதமரின் வீட்டுவசதித்திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் இதுவரை நான்கு லட்சம் வீடுகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

நடப்பாண்டில் ஏழு லட்சம் வீடுகள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

பல்வேறு திட்டங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என்று கர்நாடக அரசு கோரிக்கை விடுத்ததாகவும், இதுகுறித்து பரிசீலிக்கப்படும் என்றும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறினார்.

<<<<<>>>>>

தில்லி சட்டப்பேரவைக்கு அடுத்த மாதம் 5–ஆம் தேதி நடைபெறவுள்ள தேர்தலுக்கான வேட்புமனுக்கள் பரிசீலனை தற்போது நடைபெற்று வருகிறது.

வேட்புமனுக்களை விலக்கிக்கொள்ள வரும் திங்கட்கிழமை கடைசி நாளாகும்.

அன்றைய தினமே இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும்.

தமிழகத்தின் ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதிக்கும், உத்தரப்பிரதேசத்தில் உள்ள **Milkipur** சட்டப்பேரவைத் தொகுதிக்கும் அடுத்த மாதம் 5-ஆம் தேதி நடைபெறவுள்ள இடைத்தேர்தலுக்கான வேட்புமனுக்கள் பரிசீலனையும் தற்போது நடைபெற்று வருகிறது.

இந்த இரண்டு தொகுதிகளிலும், வேட்புமனுக்களை விலக்கிக்கொள்ள வரும் திங்கட்கிழமை கடைசி நாளாகும்.

அன்றைய தினமே இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படவுள்ளது.

<<<<<>>>>>

கர்நாடகாவில் மைசூரு நகர்ப்புற மேம்பாட்டு ஆணைய முறைகேடு தொடர்பான சட்டவிரோத பணப்பரிவர்த்தனை வழக்கில் 300 கோடி ரூபாய் மதிப்பிலான 142 அசையா சொத்துக்களை அமலாக்கத்துறை முடக்கியுள்ளது.

நிலங்களை ஒதுக்கீடு செய்ததில், முறைகேடு நடைபெற்றதாக கூறி, கர்நாடக முதலமைச்சர் திரு சித்தராமையா உள்ளிட்டோருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், அமலாக்கத்துறை இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இதற்கிடையே, திரு சித்தராமையாவின் ஊழல் முறைகேட்டினை இவ்வழக்கின் விசாரணை எடுத்துரைப்பதாக உள்ளது என்று அம்மாநில பிஜேபி தலைவர் திரு விஜயேந்திரா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்த வழக்கின் விசாரணை சிபிஐ-க்கு மாற்றப்பட வேண்டும் எனறு வலியுறுத்தியுள்ளார்.

இவ்வழக்கின் விசாரணை நேர்மையாக நடைபெறுவதற்கு ஏதுவாக திரு சித்தராமையா முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்றும் திரு விஜயேந்திரா கோரியுள்ளார்.

<<<<<>>>>>

தெலங்கானா அரசு, திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்குவதற்காக சிங்கப்பூரில் உள்ள தொழில் கல்வி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

முதலமைச்சர் திரு ரேவேந்த்ர ரெட்டி தலைமையிலான குழுவினர் சிங்கப்பூரில் உள்ள அந்த நிறுவனத்தை பார்வையிட்ட பின்னர் இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

தெலங்கானாவில் உள்ள இளைஞர்களின் திறனை மேம்படுத்துவதற்கு இந்த நடவடிக்கை உதவிடும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விரைவில் சிங்கப்பூர் குழுவினர் தெலங்கானாவிற்கு வருகை புரிந்து இதுதொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<>>>>>**

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் வெகு விமரிசையாக நடைபெற்றுவரும் மகா கும்பமேளாவில் இதுவரை கோடிக்கணக்கானோர் புனித நீராடியுள்ளனர்.

இன்று மட்டும், காலை பத்து மணிவரை 19 லட்சத்துக்கும் மேற்பட்டோர் புனித நீராடியுள்ளனர்.

இதற்கான விரிவான ஏற்பாடுகளை மத்திய அரசுடன் இணைந்து, உத்தரப்பிரதேச அரசு மேற்கொண்டுள்ளது.

இதன் காரணமாக, பிரயாக்ராஜ் நகரமே விழாக்கோலம் பூண்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சுற்றுலா வளர்ச்சிக்கும் இது பெரிதும் உதவிகரமாக உள்ளது என்று அவர் மேலும் கூறுகிறார்.

மகா கும்பமேளா காரணமாக, வணிகம் 30 முதல் 40 சதவீதம் அதிகரித்துள்ளதாக வணிகர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

இந்த நிகழ்ச்சியின்மூலம், இரண்டு லட்சம் கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மகா கும்பமேளாவில் இன்று பங்கேற்று புனித நீராடவுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், நம் நாட்டின் ஆன்மிக மற்றும் கலாச்சார பராம்பரியத்தின் கொண்டாட்டமாக மகா கும்பமேளா திகழ்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்துபேசும் மன்கிபாத், அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சலி செலுத்தும்,

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்பு செய்கிறது.

இது, இரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பும் செய்யப்படும்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<>>>>>

கர்நாடக இசை மும்மூர்த்திகளில் ஒருவரான சத்குரு ஸ்ரீ தியாகராஜர் ஆராதனை விழாவின் முக்கிய நிகழ்ச்சியான பஞ்சரத்ன கீர்த்தனைகள் இசைக்கும் நிகழ்ச்சி தமிழகத்தின் திருவையாறில் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

மங்கள இசையுடன் தொடங்கிய இந்த நிகழ்ச்சியில், புல்லாங்குழல் இசையைத் தொடர்ந்து முதல் பாடலாக ராகம் ஆதி தாளத்தில் அமைந்த “ஜகதானந்த காரகா” பாடலை ஏராளமான இசைக்கலைஞர்கள் ஒன்றுசேர பாடியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - நந்தகோபால் - 63 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக்கோப்பை மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டி மலேசியாவில் இன்று தொடங்கியது.

இந்தியா, இலங்கை, இங்கிலாந்து உட்பட 16 அணிகள் இதில் பங்கேற்றுள்ளன.

முதல் போட்டியில் ஆஸ்திரேலியா 9 விக்கெட் வித்தியாசத்தில் ஸ்காட்லாந்தை வென்றது.

இந்தியா தனது முதல் போட்டியில் நாளை வெஸ்ட் இன்டீஸ் அணியை எதிர்கொள்கிறது.

<<<<<>>>>>

சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான இந்திய அணியை தேர்வு செய்வதற்கான தேர்வுக்குழுவின் கூட்டம் இன்று மும்பையில் நடைபெறுகிறது.

<<<<<>>>>>

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டி, அடுத்த மாதம் 14-ஆம் தேதி தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வதோதரா, பெங்களூரு, லக்னோ மற்றும் மும்பையில் போட்டிகள் நடைபெறவுள்ளதாக கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் கூறியுள்ளது.

வதோதராவில் நடைபெறவுள்ள முதல் போட்டியில் பெங்களூரு அணி, குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

<<<<<>>>>>

புதுதில்லியில் நடைபெற்றுவரும் உலகக்கோப்பை கோ கோ போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவு அரையிறுதி ஆட்டங்களில் இந்தியா இன்று தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

<<<<<>>>>>